# தென்னகம்

ஆசிரியர்: K. A. மதியழகன்

வெள்ளி | 18 – 9 – 59 | விலை 16 காசு


# தி. மு. க. கண்கவர் கோலம்!

★

## அண்ணாவின் சாதனை !


ஈ.வி.கே. சம்பத்



ஓராண்டிற்கு முன்பென்றால் அண்ணா அவர்களைப்பற்றி எதுவும் என்னால் எழுதியிருக்கவே முடியாது. அவ்வளவு நெருக்கமாக இருவர் வாழ்வும் பின்னிக் கிடந்தது. கழகத்தின் பொறுப்புகளும், பணியாற்றும் துறைகளும், பணிகளும் மிக மிக, நமது தோழர்களின் சந்திப்பே மாநாடாகத் தான் அமைகிறது. முன்பு சந்திப்புகள் அதிகம் என்பதைக் காட்டிலும், ஒன்ருகவே இருந்தோம் என்று சொல்வதே பொருந்தும். ஒன்ருக இருந்து அன்ருட அலுவல்களில் ஒன்ருகவே ஈடுபட்டிருக்கும் இருவர் ஒருவரைப்பற்றி ஒருவர் புகழ்ந்து எழுதுவதென்ருல் அது எளிதல்லவே. இருவருள் எவர் ஒருவரை பிறர் பாராட்டினுலும் இருவரும் தம்மைப் பாராட்டியதாகவே பெருமையோடு மகிழ்ந்து கொண்டிருந்தோம். இன்று பணிகளும், பணிகளின் தன்மையும் எங்கள் நெருக்கத்தைச் சற்று தளர்த்தியிருப்பதால் அவரைக் குறித்து என்னுல் எழுத முடிகிறது. அவரது திறமை, பண்பு, தொண்டு ஆகியவற்றை அழகுபட, தமிழ்மக்கள் அனைவரும் அறியத் தக்க வகையில் புகழ்ந்து கவிஞர்களும், கலைஞர்களும் அறிஞர்களும் திறம்பட எடுத்துரைத்துள்ளனர். அவற்றைச் சுவைத்துச் சுவைத்து, அத்தகையவரின் உறவில் எத்தனை ஆண்டுகள் நாம் வளரும் வாய்ப்பைப் பெற்ருேம் என்பதை எண்ணி இன்பமடைவது தவிர, புகழும் போட்டியில் வெற்றிபெறும் வல்லமை எனக்கில்லை.

அவருக்கும் எனக்கு -மிடையே ஏற்பட்ட உறவு பற்றி நான் கூறினுல் அது பிறர் கூறுவதாய் இருக்கும் அதனுல் அதில் சுவை மிருக்கலாம். ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன்பு அவர் ஈரோட்டிற்கு வந்தபோது அவர் எனக்கு அண்ணனுகவும், எனது இலட்சிய அறிவுப் பெட்டகமாகவும் ஆனுர். முதன் முதல் அவரது அன்பு என்னை ஈர்த்தது. அதன்பின் அவரது அறிவாற்றலைப் பிறர் வியந்து பாராட்டுகின்றனர் என்பது புலப்பட்டது. சில ஆண்டுகள் கழித்து அவரது அறிவும், ஆற்றலும் தனித்தன்மை வாய்ந்தது என்பதை உணர்ந்தேன். இருவருக்கிடையே ஏற்பட்ட அன்பும் பாசமும் அத்துடன் கூடவே வளர்ந்தது.

1949-ல் தமிழக அரசியலில் பெரியார் அவர்களால் தமிழர்கள் வாழ்க்கை நலத்திற்கான விடுதலை முயற்சிகள் குலைந்துவிடக் கூடும் என்னும் நிலை ஏற்பட்டபோது இவரால் மட்டுமே அபாயத்தை தடுக்க முடியும் என எனக்கு உறுதியாகப் பட்டது. எனக்கு அவரிடமுள்ள அன்பின் ஆக்கச்சக்தியனைத்தையும் பயன்படுத்தி அவரை எனது திட்டத்திற்கு இணங்க வைத்தேன். அதன் விளைவாகத் திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்தது. அதற்குத் திராவிடம் அவருக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

கோப தாபங்களுக்கு எளிதில் இரையாகி விடும் பருவத்தினரை உடன் வைத்துக்கொண்டு அந்தப் பருவத்தை அண்மையில் தாண்டிய ஒருவர் ஒரு கட்சியை உருவாக்கி வளர்ப்பதில் எவ்வளவு இடர்ப்பட்டிருப்பார் என எவ்வளவு விளக்கினுலும் முழுதும் கூறல் என்பது இயலாது. அத்தகைய இடர் மிக்க சோதனையான பணியினைத் திறம்படச் செய்து பத்து ஆண்டுகள் நிறம்ப


(8–ம் பக்கம் பார்க்க)

# ஆண்ட தமிழகத்தின் கலங்கரை

**ஏ.கே. வில்வம்**

அண்ணா!

வாய் நிறைந்த அழகு மொழி வயிற்றிலே இருந்து கிளம்புகிறது.

பல லட்சம் குரல்கள் — பாசத்தை சுமந்துகொண்டு வீடு தலைப் படை நடத்தும் அத் தளநாயகரின் செவிகளை மோதுகின்றன.

'ஏன் தம்பி' என்கிறார் அவரின் இதயம் மலர்கின்றது.

அப்பப்பா! நமக்கெல்லாம் எத்தனை இன்பம். என்ன மாயம் இது! எத்தகைய சக்தி — கண்டவர் விண்டிலர் — விண்டவரும் காண முடியாத விந்தைதானோ?

அவரைக் காணுகின்றோம். உயிரெல்லாம் உடம்பெல்லாம் நனைகின்றோம். எண்ணங்கள் சுழல்கின்றன. இந்தப் பாச உணர்வு–ரத்தக் கலப்பு – நம்மையெல்லாம் ஒரு குடும்பமாக்கிற்று. ஆம். திராவிட மூதுரை மீட்கின்ற தேசியக் குடும்பம்!

நமது குடும்பத்தின் மூத்தவர் — இன்று நடுப்பகல் ஞாயிறு ஆகின்றார்.

நள்ளிரவின் வெள்ளி நிலவாக ஒளி பொழிகின்றார்.

இலட்சிய வாழ்வெனும் எழில் மாளிகையின் ஐம்பதாவது படிக்கட்டில் அண்ணனின் அடிச்சுவடுகள் பதிந்து விட்டன!

ஏனோ! என் விழிகளில் நீர் முத்துக்கள், ஆனந்தப் பெருக்கா? ஆமாம்! அவரின் சீரடிகளை நனைக்கட்டும் இதுதான் அவருக்கு என்னால் தரமுடிந்த பொன்விழா பரிசு!

* * *

தனி மனிதரின் அயராத உழைப்பால் ஒரு சமுதாயம் எத்தகைய மாற்றங்களைப் பெற முடியும் என்பதைச் செயல் மூலம் காட்டிய ஆற்றலின் மொத்த வடிவம் அவர்!

ஜனநாயகம் பேசிக்கொண்டே அதை மெள்ள மெள்ளக் காயப்படுத்திக்கொண்டிருக்கும் அரசியல் தலைவர்கள் நடமாடும் சகாப்தத்தில் ஜனநாயகத்தின் விளக்கம் அவர்!

தத்துவ ஞானம் பேசிய அறிவியல் வித்தகன் ஒருவனை அரசியல் கழுகுகள் கொத்திச் சாப்பிட்ட கதை கிரேக்க மண்ணிலிருந்து நமக்கெல்லாம் கிடைத்தது.

அந்தக் கதையின் கதாநாயகன் சாக்ரடீஸ். அவன் பெயரைக் கேட்ட அளவில் உலகம் கிரேக்க மண்ணைத் திரும்பிப் பார்த்தது! நம்முடைய அண்ணா அவர்களின் மொத்த ஆற்றலை – முழு உருவத்தை–உலக நாடுகள் என்று உணர்கின்றதோ அன்றுதான் உலகத்தின் பார்வை – இன்பத் திராவிடத்தின்மேல் விழப் போகின்றது என்கிற நம்பிக்கை தமிழகத்தின் பொதுவான எண்ணமாகும்!

அகத்தியன் சகாப்தத்தில் வளைந்த தமிழகத்தின் முதுகு அறிஞர் அண்ணாவின் சகாப்தத்தில் நிமிர்ந்து நிற்பதை இன்று தாயகம் காண்கின்றது. அதற்கு காரணகர்த்தாவான நம்முடைய அண்ணா அவர்களை நாடு வாழ்த்துகின்றது; நல்லிதயங் கொண்டோர் போற்றுகின்றனர்.

வேறு எவரும் பெற முடியாத இத்தகைய ஒரு பெருந்தகையை அறிவுலகின் தலைவரை நாமெல்லாம் நல்லாசானாக வழிகாட்டியாக பெற்றிருக்கின்றோம். நம் முடைய 'எதிரிகள்' நம்மைக் கண்டு பொருமைப்படுவதற்கே காரணம் இதுதான்!

ஈர விறகுகளை வைத்துக் கொண்டு அரசியல் அடுப்பு மூட்ட நினைப்போருக்கு பாவம் இருக்காதா ஆத்திரம்!

"அறிவெனப்படுவது பேதையர் சொல்நோன்றல்" என்னும் புறப்பாட்டின் நடமாடும் எடுத்துக்காட்டு நமது அண்ணா! அத்தகைய அரசியல் பெருந்தகையாளரின் பொன்விழா நினைவு நாளன்று 'எதிரிகளை'ப் பற்றி நாம் அதிகம் எழுதுவதை அவர் அணுவளவும் விரும்பமாட்டார்; ஏன் என்றுமே அவர் விரும்பியதில்லை.

* * *

"சாக்ரடீசையும், பிளாட்டோவையும் ஒப்புக்கொள்ளாத கிருஸ்தவ மதததை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன்" இப்படிச் சொன்னான் மாவீரன் நெப்போலியன்.

"எட்டுக்கோடி ஆதி திராவிட பெருமக்களை மக்கள் என்று ஒப்புக்கொள்ளாமல் ஒதுக்கி வைத்திருந்த "இந்து மதத்தையும்" நான் ஒப்புக்கொள்ள முடியாது என்றார் அறிஞர் அண்ணா.

"கடவுள் இருக்கிறது என்று சொல்பவன் அயோக்கியன்–கடவுள் இல்லை என்பவன் முட்டாள்" என்றார் பெர்னாட்ஷா.

"கடவுளையும் உடைக்காதே–கடவுளுக்கு வீணாக தேங்காயும் உடைக்காதே" என்றார் அண்ணா.

"ஒரு கட்சியில் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதல்ல முக்கியம்–எத்தனை பேர் கட்சிக்காக இருக்கிறார்கள் என்பதைக் கவனி" என்றான் லெனின்.

"உழைப்பவனைத் தேடிப் பிடித்து சேர்த்தால் ஒரு கட்சிக்கு உன்னதமான கட்டுக்கோப்பு இருக்கும் – "கிடைப்பவனைக்" கொண்டு நடத்துகின்ற கட்சிக்கு அத்தகைய கட்டுக்கோப்பு இருக்காது" என்றார் அண்ணா.

"வளர்ச்சி பெறக்கூடிய ஒரு அரசியல் அமைப்பின் தலைவன்– "உனக்கடுத்து உன் கட்சிக்கு தலைவன் யார்?" என்ற கேள்விக்கு இடம் தரமாட்டான்" என்றான் எட்மண்ட்பர்க்!

"நான் சாமான்யன் – மிக மிக சாமான்யன் – எனக்கடுத்த தளநாயகர்கள் எத்தனை பேர் வேண்டும்–இதோ எண்ணிக்கொள்" என்கிறார் அண்ணா.

"பிரெஞ்சுப்புரட்சி தன் தலைக்கு மேல் ஒரு முற்றுப்புள்ளியை தூக்கி வைத்துக்கொண்டபோது – "வேட்டு முறையின் மூலம் அமைக்கப்படுகின்ற ஒரு அரசுக்கு – அதே வேட்டுமுறையில் தான் அழிவு இருக்கிறது" என்றான் – எக்லேண்டன் என்கிற பிரெஞ்சு அறிஞன்.

ஓட்டு முறையும் வேண்டாம்–வேட்டு முறையை நான் என்றுமே விரும்புவதில்லை. நான் வரவேற்பதெல்லாம் ஓட்டு முறை தான் என்கிற ஜனநாயக வாதத்தில் அசையாத நம்பிக்கை வைத்திருக்கிறார் அண்ணா!

"இந்துக்களும் முஸ்லீம்களும் எப்பொழுதுமே ஒன்று சேராமல் பிரிந்து இருக்கின்ற ரயில்பாதை போல–அதனால் நான் தனிக் குடித்தனம் போக வேண்டும்" என்று வேவல் துரையிடம் திட்டவட்டமாக சொன்னார் ஜனாப் ஜின்னா!

"வடக்கும் தெற்கும் ஒத்து வாழ முடியாத இருதுருவங்கள்–எனவே எல்லைக்கோடு வேண்டும்" என்கிறார் அண்ணா!

இத்தகைய காரணங்களால் தான். 'அண்ணாதுரை' என்கிற அத்திருநாமம், அண்ணாவாகி, தமிழகத்தின் ஷாவாகமாறி, இலட்சோபலட்சம் தமிழ்க் குடியினரின் இதய தீபமாகி, இன்று அறிவுலகின் பேரொளியாக திகழ்கின்றார்.

பேச்சு மேடையா—அண்ணாவின் வாடை!

நாடக அரங்கா — அண்ணாவின் முத்திரை!

திரையுலகா — அண்ணாவின் பாணி!

கல்விக் கூடங்களா—அண்ணாவின் நிழல்!

எழுத்துலகா — அண்ணாவின் பரம்பரை!

எந்தச் சினிமா வசனகர்த்தாவின் படிப்பறைகளில் அண்ணாவின் பழைய 'திராவிடநாடு' வால்யூம்கள் இல்லை?

அவரை – வாதுக்கு அழைத்த "இலக்கிய இமயங்கள்" இன்று இருக்குமிடம் எங்கே?

'தமிழ்' என்ற வாசகம் தெரிந்தோர் அனைவருக்கும் 'அண்ணா' என்ற வார்த்தை தாரக மந்திரம!

இடையிலே தமிழ் நடைக்கு ஏற்பட்டிருந்த 'பயங்கர அஜீர்ணம்' அண்ணாவின் எழுதுகோலபட்டு குணமடைந்த கதை 'எதிரி'களே ஒப்புக்கொண்ட வெளிப்படையான உண்மை!

நமதுகுடும்பத் தலைவரின் அத்தனைச் சிறப்புகளையும், ஏட்டில் அடக்க முடியவில்லையே—எழுத்துக்களால் வடிக்க முடியவில்லையே – என் செய்வது?

அண்ணா தமிழ் வாழும் நெஞ்சங்களில் வாழ்கின்ற காவலர்!

அண்ணா தகைமை மிகு சபைகளில் ஒளிகின்ற தீபச்சுடர்!

அண்ணா சோர்ந்து கிடந்த தாயகத்தை தட்டி எழுப்பிய புரட்சியாளர்!

அண்ணா கல்லூரி மாணவர்கள் கையகராதி!

அண்ணா தாய்க் குலத்தின் கைவிளக்கு!

அண்ணா பெருங்கல்விப் பண்டிதர்களின நிலைக்கண்ணாடி!

அண்ணா ஆண்ட தமிழகத்தின் கலங்கரை!


அண்ணா ஆளவந்திருக்கும் தமிழ் விரோதிகளுக்கோர் காலக்குறி!

அண்ணா ஏகாதிபத்திய பித்தர்களுக்கோர் அபாயவிளக்கு! ஆமாம்–ஆபத்தின் அறிகுறி!

## அண்ணியாரின் கோபத்தைத்தூண்ட அல்ல!



சட்டக் கல்லூரியில் கடந்த ஆண்டு நடைபெற்ற "நடிகன் தேவை" என்ற நாடகத்தில் பெண் வேடந்தாங்கிய சட்டக் கல்லூரி மாணவர் கருப்பண்ணன் அவர்களுடன் அண்ணா.



மலர் 1 ] [ இதழ் 35

# " என் அண்ணன் "

கடந்த பத்து நாட்களில் என்னைக் களிப்புக் கடலில் ஆழ்த்தும் இரு பெரும் நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. ஒன்று எனது திருமணவிழா. மற்றது அறிஞர் அண்ணா அவர்களின் ஐம்பத்தொன்றாவது பிறந்த தினவிழா. அண்ணாவின் பிறந்ததின விழா என்ற தித்திக்கும் சேதி எனது திருமண மகிழ்ச்சியையும் தோற்கடித்துள்ளது. அந்த பெருமிதத்திலே மிதந்து கொண்டுள்ளேன். எவருக்குக் கிடைக்கும் ஒரே சேர இப்படிப்பட்ட இன்ப நினைவுகள்!

நாடு முழுதும் விழாக்கோலம், கவிஞர்கள் பாமாலை புனைகின்றனர். அவர்தம் கவிதையில் மெருகுக்கு மெருகு தெரிகிறது உன் புகழ் பாடுவதால். கலைஞர்கள் எழுத்தோவியம் வரைகின்றனர், கம்பீரம்கோலோச்சுகிறது. பாடகர்கள் கீதம் இசைக்கின்றனர். இனிமைக்கு இனிமை கூட்டுகிறது.

சிறப்பு மலர்கள், சிறந்த சொற்பொழிவுகள், கொடியேற்று விழாக்கள். கோடிக்கணக்கானோர் உள்ளங்களில் உவகைப் பெருக்கு, அலைகடலுக்கப்பால் சிங்களக்கரையிலும், சிங்கப்பூர் மைதானத்திலும் இதுபற்றியே ஆர்ப்பரிப்பு.

"எங்கிருந்தோ வந்தான், எங்கள் இதயந்தன்னில் இடம் கொண்டான்" என்று பண்பாடுகின்றனர். ஊரும், உலகமும், உத்தமரும் உங்களைப் புகழ்வது கண்டு என் உள்ளம் 'கள்வெறி' கொள்கிறது. அண்ணனே! எங்களை ஆட்கொண்டவனே! எங்கெங்கு காணினும் உன் சக்தி!

அன்னமூட்டிய தெய்வ மணிக்கைகளின் ஆணைக்கும் தங்கள்சுட்டுவிரலின் ஆற்றல் இல்லை! கன்னத்தேகொண்டு முத்தங்களளிப்பினும் வேடிக்கைக்காக முகத்தைத் தள்ளும் மாதரசியின் வேல் விழிகளுக்கு, தங்கள் ஒளி உமிழும் கண்களுக்கு இருக்கும் கட்டளைத்திறன் ஏது?

நாடும் நானிலமும் எத்தனையோ மேதைகளை, அறிஞர் பெருமக்களை நாயகர்களைச் சந்தித்துள்ளது. அவர்களுக்கெல்லாம் எங்கே இருந்தது அந்த காந்தசகவர்ச்சி. சிலர் நோட்டுகள் மட்டும் அளிப்பர், வேறு சிலரிடம் ஓட்டுக்கள் மட்டும் அளிப்பர். தங்களிடம்மா பல்லாயிரம் ஆற்றல்நிறை இளைஞர்கள் உயிர்ச் சீட்டுக்களையே அளித்துள்ளனர்.

மரணம் நீங்கள்காட்டும் வழியானால் அதை திரணமாக மதிக்கும் ஆயிரம் ஆயிரம்பேர் சூழ்ந்து நிற்கின்றோம். துப்பாக்கிக் குண்டுகளுக்கு எங்கள் மார்புகளை விரித்துள்ளோம்.

தடியடித் தழும்புகள்-பெறற்கரிய பூச்செண்டு: கண்ணீர்ப்புகை-அது எங்களுக்கு பன்னீர்த்தூள்; வறுமை - அது எங்கள் பொறுமையை ஒரு நாளும் குலைக்காது. எண்ணற்றோர் தங்கள் சுகதுக்கங்களை, உடலை உயிரை உடைமையை; உங்கள் கருத்துப்படி காணிக்கையாக்கக்காத்துநிற்கின்றனர்.

உடன்பிறப்பே! உத்தமனே! தங்கள் சொந்தத் தாயின் வயிற்றில் பிறந்த சகோதரர்களையும் 'இரண்டாந்தரமாக்கி 'என் அண்ணன்' என்ற முதலிடத்தை என்போன்ற எத்தனையோ தம்பிமார்கள் தங்களுக்கு அளித்துள்ளனர். 'அண்ணா' என்று அகங்குழைய, அத்தனையும்குழைய அழைக்கும் அன்புப் பெருக்குக்கு அவனியிலே ஈடுஎது இணைஎது என்று சொல்லமுடியாது தவிக்கிறேன். 'அண்ணா' என்று முதன் முதல் தங்களுக்கு எந்த தாய் திருநாமம் இட்டு அழைத்தார்களோ, அந்த அன்னையின் வாய்க்கு ஆயிரம் மணங்கு சர்க்கரை கொட்டவேண்டும். 'அண்ணா' என்ற சொல்லுக்குப் பொருளேற்றிய சுந்தரனே! சொல்லி முடிவதுண்டோ உன்சோபிதம்! நாடகவேந்தன் ஷேக்ஸ்பியர் சொன்னானே கிளியோபாத்ராவின் அழகின் வகை காண முடியாத வர்ண ஜாலத்தை காலமோ வயதோ மாற்ற முடியாது என்று, அவன் மட்டும் எங்கள் தலைமுறைக்காரனாய் இருந்தால் உங்கள் தமிழுக்கல்லவா அந்த புகழ்மாலையைத் தொடுத்திருப்பான்!

உங்கள்பேனாவிலிருந்து உருண்டோடி வரும்எழுத்தோவியங்கள் காலமெனும் பருவக்காற்றால் உலர்ந்துவிடும் சிறகுகளல்ல. ஊழி உள்ளளவும் மின்னிடும் பொன்!

உங்கள் எழுச்சிமிக்க பேச்சின்நடையை, இங்கர்சால் உயிரோடிருந்தால், பயில தென்னகம் வந்திருப்பான்.

பர்க் மயானபூமியிலிருந்து எழுந்து சட்டமன்றத்திற்கு வந்து தங்கள் அறிவாற்றல் மிக்க உரையை செவிமடுக்கும் வாய்ப்புக் கிடைக்குமானால் ஊமையாவான். மணிக்கணக்கில் வாய் பொத்தி, கை கட்டிசெவிபடுப்பான். இந்த நளினத்தை, லளிதத்தை, லாவண்யத்தை, என் நாட்களில் கையாண்டதில்லையே என்று வருந்துவான்.

தங்கள் நாடக ஆற்றலை கண்டு இங்கோர் இப்சன், இங்கோர் கால்ஸ்வொர்த்தி, இங்கோர் பெர்னட்ஷா எனமாற்றாரும் புகழ்ந்தனர். எம். ஏ. படித்த அண்ணாதுரை 'அரிதாரம்' பூசி நடிக்கிறார் என்று பெரியாரவர்களே தங்கள் ஆற்றல் அவருக்கு ஆபத்து என்று அவரும் நினைக்காத அந்த 'நல்ல நாட்களில்' புளகாங்கிதம் மேலிட பாராட்டினார். பரம்பரை நடிகரும் தங்களிடம் கலை பயின்றனர். திரை உலகம் திருப்பு முனையைக் கண்டது.

ஜொலி ஜொலிப்பும் தகதகப்பும் என்றும் தங்களை அடிமை கொண்டதில்லை. மின்னலை நம்பி காரியங்களை துவக்குவதில் பலன் கிடைக்காது என்ற அனுபவ மொழிக்கு இலக்கியமானீர்! "உங்கள் மூதாதையரின் மகோன்னதமான பொற்காலத்தை பாரீர்" என்று காலத்தால் புழுதி படிந்த ஏடுகளை எடுத்து இளைஞர்முன் வைத்தீர்! மின்சாரமென பாய்ந்தது முன்னவர் கீர்த்தி கூறும் தங்கள் வசீகரச் சொற்கள்! மறிக்கொணா இளைஞர் கூட்டம் எழுந்தது.

எங்கெங்கோ இருப்பவரெல்லாம் "இந்த விந்தை மனிதர் யார்?" என்று வினயத்துடன் வினாதொடுப்பது கேட்டு சொந்தம் என்ற முறையில் எத்தனையோ முறை இறுமாப்புக்கொண்டுள்ளேன். அரசியல் கட்சிகள் அமைப்பதில், கிளர்ச்சிகளை உருவாக்குவதில் அகிலஉலகப் புகழ் வாய்ந்தவர் என்று போற்றப்படும் டாகடர் லோஹியா அவர்கள் "அண்ணாதுரை அமைத்துள்ளதைப்போல் வலிவான அரசியல் கட்சியை அமைக்க முடியவில்லை" என்று பாராட்டுவதை என் காதாரக் கேட்டேன்.

மூன்று திங்களுக்கு முன் பெங்களூர் சென்றிருந்த போது மைசூர் முன்னாள் அமைச்சர் அனுமந்தையா அவர்கள் "தென்னகத்தில் அண்ணா அவர்கள் பெரும் அரசியல் சக்தி" என்று கூறினார். காலஞ்சென்ற திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள் மறைவதற்கு பத்து நாட்களுக்கு முன்பு அவர் இல்லம் சென்றிருந்தேன். மரணத்துடன் போராடிக் கொண்டிருந்த தமிழ்த் தென்றல் "தம்பி! முன்பெல்லாம் பள்ளி மணவர்கள் திரு. வி. க நடை என்று என் தமிழை அழைப்பார்கள். இப்போது அண்ணாதுரை நடையைப் பின்பற்றுவதாகக் கூறுகிறார்கள். எனக்கு மிக்க மகிழ்ச்சி" என்று கூறிய அணையும் அந்த தீபத்தின் முகத்தில் தோன்றிய சுடரொளி என் கண் முன்னாலே தெரிகிறது.

அண்ணனே! எங்கள் ஆருயிர் தலைவனே! மணிமாளிகைகளும் அவை தரும் சுகபோகங்களும் உங்களுக்கு கால் தூசு. ஆர்ப்பாட்டம் ஆடம்பரம் அவை உங்களை அண்ட நடுங்கும். அதிகாரம் - கோடிக்கணக்கானவர் இதயங்களில் கோலோச்சும். எனக்கேன் வரன்முறை தரும் ஆயுதம் என்பதையெல்லாம் சொல்லாமல் சொல்லிக்கொண்டுள்ளவனே! சோர்வில்லாதவனே!

புகழ் உங்களுக்கு என்றும்போதையைத் தந்ததில்லை. இழிமொழிகள், ஏளனம், பழிச்சொல், நயவஞ்சகர் நாசக்காரச் செயல்கள் அத்தனையையும் தாங்கினீர்கள். சமப்படுத்தினீர். பொது வாழ்வுக் காரனுக்கு பொன்னான உதாரணமான பொறுமையின் பூஷணமே! எதையும் தாங்கும் இதயங்கொண்டவரல்லவோ தாங்கள்! உங்களைப் போன்றதோர் தலைவரை இது நாள்வரை தமிழர் சமுதாயம் கண்டதில்லை. இனி காணப்போவதுதுல்லை. உங்கள் தலைமுறையில் தமிழகத்தில் பிறந்ததை விட பெறற்கரிய பேறு திராவிட இளைஞருக்கு வேறு என்ன இருக்கிறது? அந்தப் பேற்றினைவிடப் பெரியதாக, உங்கள் காலடியில் என்றும்சேவகனாக, பணியாளாக தோழனாக, அன்புத் தம்பியாக வாழும் வாய்ப்புப் பெற்றேன். அதைவிட வேறு சிறப்பு நமது தலைமுறை திராவிட வாலிபனுக்கு வேறு எதுஉண்டு! ஆருயிர்அண்ணனே! அன்பு நிறைந்தவனே! ஒரே ஒருசிறப்பு உங்களை விட எனக்கு உண்டு. என்னால் உரிமைபாராட்டும் அண்ணனைவிட சிறந்த அண்ணனைக் காட்டி "என் அண்ணன்" என்று உங்களால் கூற முடியாது. அந்த பெருஞ் சிறப்பு, உங்களுக்கு கிடைக்காத, கிடைக்கமுடியாத, எனக்கு மட்டுமே கிடைத்த பெரும் பாக்கியம். அந்த கர்வ வாடை என்னைச்சுற்றி கமழ்கிறது! வாழ்த்தும் வயதுடையவனல்ல, முறையும் அல்ல! உங்கள்வழி நடக்கக் காத்திருக்கிறேன். பசி, பட்டினி, சிறை, வறுமை, கொடுமை, இழிவு, மரணம் - எதுவும் என்னை ஒன்றும் செய்ய இயலாது என்று இலட்சக்கணக்கான திராவிட வாலிபர்போல் நானும் உறுதி கூறுகிறேன்.

தங்கள் தம்பி,

## ஆருயிர்

# அண்ணனே, வாழ்க!

ப.வாணன்

" அண்ணாவிற்கா......வயது ஐம்பது!" என்றுதான் ஆச்சரியத்தோடு கேட்கத் தோன்றுகிறது. இரவும் பகலும் அவரோடு இருக்கிறோம். சென்ற பதினைந்து ஆண்டுகளாக அவரைக் காணாத, கண்டு மகிழ்ந்திடாத நாட்கள் அவர் சென்னையைவிட்டு வெளியூர்களுக்குச் சுற்றுப் பயணம் சென்றிருந்த நாட்களாகத் தானிருக்கும். அன்றைக்கு எப்படியிருந்தாரோ அப்படியேதான் இன்றுமிருக்கிறார்!

அன்றுபோலவே, இன்றும் விடிய, விடிய அரசியலைப்பற்றி அரிய கருத்துக்களை வாரி வீசுகிறார். இலக்கியத்தின் இனிமைகளை வெகு அழகாக எடுத்துரைக்கிறார். நாட்டின் நிலைமையை மனமுருகக் கூறி, நமது கடமையை நம்மையறியாமலே நம் மனதில் புகுத்தி, கோழைகளையெல்லாம் வீரர்களாக்கி விடுகிறார். "பொழுது புலர்ந்தது — நாங்கள் தெளிவு பெற்றோம்—புதிய தெம்பு கொண்டோம் — என்றெல்லாம் நாம் சொல்லிக் கொண்டு புறப்பட நேரம் கிடையாது. அன்று போலவே, இன்றும் அலுக்காமல் இரவு பூராவும் விழித்து நண்பர்களை அறிவுக் கடலில் அமிழ்த்தி எடுத்து விட்டு, அதே தொடர்ச்சியில் பேனாபிடித்து பொன்னான கருத்துக்களை நாட்டு மக்களுக்கு பரப்பும் புதுமை இலக்கியம் எழுத அமர்ந்து விடுவார்கள்!

இளமை குன்றாத அவருக்கு ஐம்பது வயதாகிறதா என்றவுடன் ஆச்சரியம் ஏற்படுகிறது. உடனே நம் வயதை எண்ணிப் பார்க்கிறோம். நமக்கு பதினெட்டு வயதில் அண்ணாவுக்கு அருகிலிருந்து பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்தது. இன்றைக்கு நமக்கு முப்பத்தைந்து வயது எட்டிப் பார்க்கிறதே! ஆகவே அவருக்கு ஐம்பது வயது ஆகி இருக்கலாம் என்றுதான் கூறத் தோன்றுகிறதே தவிர மற்றபடி பதினைந்து ஆண்டுகளுக்கு முன் எப்படிப்பட்ட அண்ணாவைக் கண்டோமோ அதே அண்ணாதான் இன்றும் காட்சி அளிக்கிறார்! இதேபோல் என்றும் இளமை குன்றாத, உணர்ச்சி மங்காத, உழைப்பின் சின்னமாக, நாட்டின் வழிகாட்டியாக வரலாற்றை உற்பத்தி செய்யும் பெரிய தலைவராக அவர் வாழவேண்டும் என்பதுதான் நமது விருப்பம். அலுநிறை வேறஉழைப்பதே அவருக்குபணி செய்து கிடப்பதே, நம் கடமை என்பதை இந்த நன்னாளில் நம் மனதில் திடப்படுத்திக் கொள்வதே அவருடைய பிறந்த நாளை கொண்டாடும் முறை!

தலைவரின் பொன் விழாக் கொண்டாடும் இந்த நேரத்தில் அவருடைய அருமை பெருமைகளை விளக்குவது அவருக்கும், நாட்டிற்கும் நாம் செய்தத்தொண்டாகும். அந்த நோக்கிலே சென்ற பதினைந்து ஆண்டுகளில் அவரோடு பழகி அவருக்கு பணி புரிந்த நேரங்களில் அவருடைய மனப்போக்கையும், பண்புகளையும் விளக்கும் சிலசம்பவங்களைக் கூறுவது பொருத்தமானதாகும்.

அண்ணாவின் வாழ்க்கையை நான்கு பகுதிகளாகப்பிரிக்கலாம். அவருடைய இளமைப் பருவம் கல்லூரிப்படிப்போடு முடிவடைகிறது. பின் நீதிக் கட்சியில் அரசியல் வாழ்க்கை தொடங்குகிறது. பத்தாண்டுகள் கழித்து திராவிடர் கழக செயலாளராக பெரியார் ராமசாமியின் முதல் தளபதியாக வெளிவருகிறார். நான்காவது கட்டமாக, இன்னும் ஐந்து ஆண்டுகளில் தி. மு. க, வின் தனித்தலைவராகிறார்.

இந்த நான்கு கட்டங்களில் முதலிரண்டு கட்டங்கள் நடைபெறும்போது நான் பள்ளிமாணவன். அண்ணா சேலம் மகாநாட்டில் (1944-ம் ஆண்டில்) பட்டதாரிகளையும் மிட்டா மிராசுகளையும் ஒழிக்கும் தீர்மானங்களை நிறைவேற்றி வெற்றிக் கொடி நாட்டிவிட்டு சென்னை திரும்பிய போதுதான் நான் அவருடைய பல்கலைக் கழகத்திலே மாணாக்கனானேன். என் ஆருயிர் நண்பர் செழியனும் நானும் மாலை அலுவலகத்திலிருந்து வந்தவுடன் அலுப்புத் தீர குளிப்போம். இரண்டாவது தடவையாக! அயர்வு நீங்கி, புது உணர்வு பெற்ற நிலையில் கருப்பண்ண முதலி தெரு நோக்கி வேகம், வேகமாக நடப்போம். அங்கே பசியோடு வரும் குழந்தையை அன்போடழைத்து அன்னமளிக்கும் தாயைப்போல வீட்டிற்குள் நுழைந்ததும், இன்முகத்தோடு வரவேற்று; அறிவு விருந்து அளிக்கும் அண்ணா நிற்பார். "காந்தி நேற்றுக் கூட்டத்திலே கூறியிருப்பதைப்பார்த்தீர்களா?" என்று அன்றைய பத்திரிகையில் வந்த, நமது கவனத்தை ஈர்த்த சேதியொன்றைப்பற்றி பேச்சு ஆரம்பிக்கும். அவ்வளவுதான் அந்த 'கச்சேரி' முடிய பொழுது புலரும்! காலையில் அவரவர்கள் எழுந்து அவரவர் அலுவலகங்களுக்குச்சென்று விடுவோம். இந்த மாதிரி சேர்ந்தாற்போல் சில நாட்கள் இரவுக் கண் விழித்தால் கண்கள் எரிச்சல் கொடுக்கும். உடல் சொன்னபடி கேட்க மறுக்கும். இருந்தாலும் அண்ணாவைப் பார்க்காமல் இருக்க மனம் இடந்தராது. காரணம்? — அந்த அளவு மேலான எண்ணங்களை நகைச்சுவை கலந்து, உணர்ச்சி குன்றாமல் கருத்துமழை பொழியும் அறிவு ஊற்று, அண்ணா அவர்கள்.

## நகைச்சுவை!


★

'ஐவர் வழக்கில்' சென்னை மத்திய சிறையில், சிறைபட்டு இருந்தபோது ஒருநாள் பகல் தோழர் என். வி. நடராசன் உறங்கிக் கொண்டிருந்தார், வரட்சி நிறைந்த சிறை. எதிரே கத்தரிக்கோல் கிடந்தது. அறிஞர் அண்ணா அவர்கள் தோழர் என். வி. நடராசன் அவர்களின் ஒரு மீசையை கத்தரித்து விட்டார். விழித்துக் கொண்ட என். வி. என். முழு மீசையையும் எடுக்க வேண்டி வந்தது. மறுநாள் அவர் துணைவியார் "இன்டர்வியூ" பார்க்க வந்தார்கள். அவருக்கு மிகுந்த வெட்கம். எல்லோருக்கும் வேடிக்கை. வாயில் கையை பொத்திக்கொண்டே பேசிய அவரின் போக்குக்கு காரணம் புரிந்தபோது அவர்களும் விழுந்து விழுந்து சிரித்தார்கள், மீசையைப்பறிகொடுத்த கணவரைப் பார்த்து.

அண்ணாவோடு முதன் முதலில் பழகும்போது நாங்களெல்லாம் முழுக்க முழுக்க பொதுவுடமைவாதிகள், கட்சியில் உறுப்பினர்களில்லை! பெரியார் ராமசாமியையும், நீதிக்கட்சியின் ஒவ்வொரு செயலையும் பெருமைபடுத்திக் கூறுவார் என்றுதான் நாங்கள் மிக அடக்கமாக எங்களுடைய கருத்துக்களை மெதுவாகத் தெரிவிப்போம். ஆனால் அவரோ எங்களைவிட தீவிரமாக நீதிக் கட்சியினர் செய்த தவறை தெளிவாக எடுத்துக் கூறுவார்.

திராவிட சமுதாயம் பல வழியிலும் விடுதலை பெற்று, அறியாமையிலும், வறுமையிலிருந்தும் மீள வேண்டுமானால் இவையெல்லாம் செய்ய வேண்டும் என்று அன்று கூறியவைகள் இன்றும் என் மனதில் எதிரொலிக்கிறது.

சேலம் மாநாடு முடிந்தவுடன் பழையநீதிக்கட்சிக்காரர்களோடு வாக்குவாதங்கள், அது முடிந்து



" நானே போடப்போறேன் சட்டம் — பொதுவில் நன்மை புரிந்திடும் திட்டம் "

### எங்களை

# ஆட்கொண்டவனே, நீடுவாழ்க!

ஓரளவு நிம்மதியான சூழ்நிலை எய்திய நேரத்தில் "பாரதிதாசன் நிதியளிப்பு விழா" விற்கான முயற்சிகளும், அதில் குறுக்கிட்ட இடைஞ்சல்களும், என். எஸ். கே. பாகவதர் சிறைவாயிற்பட்டதும் அவர்கள் விடுதலைக்கான முயற்சிகளும். இப்படி பல்வேறு துறைகளில் முதல் ஐந்தாண்டுகள் ஓடின. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பெரியாரின் மனப்போக்கும், கட்சியிலே பலரும் இருக்கின்ற நிலைமைத் தெரியாமல் அவருக்கு கொடுத்தத் தொல்லைகளும் அவைகளையெல்லாம் புன்முறுவலோடு எவ்வளவு கௌரவமாக சமாளித்தார் என்பதும் இன்றும் நம் கண்முன் நேற்று நடந்தது போல் தெரிகிறது. கருப்பண்ண முதலி தெரு வீட்டிலே எங்களோடு அவ்வப்போது வந்து கலந்துகொள்பவர்கள் கணேசன் புலவர். செல்வராஜ். என். வி. என்., டி. வி. நாராயணசாமி. பின்னால் என். எஸ். கே. சிறைபட்டவுடன் நண்பர் கே. ஆர். ராமசாமி முதலியோர்.

சில நாட்களுக்குப் பிறகு எங்கள் முகாம் செம்புதாஸ் தெருவுக்கும். அதற்குப்பின் புரசையில் அன்பழகன் வீட்டிற்கும், அதற்குப்பின் தேவராசர் அகத்திற்கும் பின்னால் அறிவகத்திற்கும் அதற்குப் பிறகு இறுதியாக அண்ணாவின் அகத்திற்கும் மாறியது. முகாம் என்றால் உண்மையிலேயே போர்க்களத்தில் முகாம் போடும் தளபதிபோல்தான் தான் நடந்துகொள்வார். ஒருவித வசதியும் தேடமாட்டார், தலையணை இல்லாமல் அவரே படுக்கும்போது நமக்கு நின்றபடியே தூங்கும் பழக்கம்கூட ஏற்படாமல் என் செய்யும்?

அண்ணாவிற்கு இருந்த வசதிக் குறைவோடு வேறெந்த எழுத்தாளனும் இந்தளவு உயர்ந்த இலக்கியங்களை உற்பத்தி செய்திருக்க முடியாது. அவர் எழுதிய பல கதைகளும் கட்டுரைகளும் பல பேர்கள் சுற்றி விவாதித்துக் கொண்டிருக்கும்போதே மண்ணெண்ணெ விளக்கு எரிந்து அணைந்து கொண்டிருக்கும் நிலையில் அவசரம் அவசரமாக எழுதியதே ஆகும். உண்மையில் 'ஆகஸ்டு–15' பற்றி அவர் எழுதும் போது காகிதம் பத்தாமல் போய் – ஏதேதோ காகிதங்களை கிழித்துக் கொடுத்த ஞாபகம் இருக்கிறது. சில சமயங்களில் பேனாவிற்கு மசி ஆகிப்போய், வேறு வழியின்றி பென்சிலில் எழுதிய நாட்கள் உண்டு.

மிக முக்கியமானகருத்துக்களை வாரிக்கொட்டிய பல வானொலி சொற்பொழிவுகள், பேசுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக எழுதி எடுத்துச் செல்லப்பட்டதுதான்!

அவருடைய உயர்ந்த கற்பனைக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் "ஓர் இரவு" நாடகம் ஒரே இரவில் எழுதப்பட்டது. எழுதி முடிந்தவுடன் பஸ் ஏறி சென்னை வந்தார். அன்று விடுமுறை ஆனதால் தூங்கிக் கொண்டிருந்தேன். என்னைத் தட்டி எழுப்பி "இந்த நாடகத்தை படிக்கிறேன், கேள்!" என்று கூறியவண்ணம் படிக்க ஆரம்பித்தார். அவர் படிக்கக் கேட்டால் அதைவிட சுவையானது உலகத்தில் என்ன இருக்கிறது? அந்த இன்பத்திலே லயித்துக் கொண்டிருந்த நான் என்னையும அறியாமலே "அதெப்படி அண்ணா, சுடப்பட்ட ரத்தினம் பிழைத்தான்?" என்றேன். உடனே அண்ணா அவர்கள், என்னுடைய 'ஸஸ்பென்ஸ்' நிச்சயம் வெற்றிபெறும் – வாணனே ஏமாந்து விட்டான்!" என்று சிரித்துக் கொண்டே அருகிலிருந்த ராமசாமியிடமும், செழியனிடமும் கூறினார்கள்!

சில நேரங்களில் பெரிய பிரச்னைகளைப் பற்றி விவாதம் பலமாகப் போகும். ஒரே குழப்பமாக இருக்கும். சம்பத்து, நெடுஞ்செழியன், மதியழகன், அன்பழகன், எல்லோரும் கூடி விடுவார்கள். ஆளுக்கொரு முனையிலிருந்து விஷய விளக்கம் பெற வேண்டுமென்ற நோக்கோடு விவாதிப்பார்கள். அந்த நேரங்களிலெல்லாம் அண்ணாவின் பொறுமையும். தெளிவான அறிவுரைகளும் மறக்க முடியாதவை.

தூத்துக்குடி மாநில மாநாட்டிற்கு போவதா, வேண்டாமா என்ற பிரச்னையின்போது எங்கள் அறையில் ஒரே வாக்குவாதம். திடீரென்று அண்ணா எழுந்தார்... "சரி, நீங்கள் எல்லோரும் உங்கள் வாதங்களை காகிதத்தில் எழுதிப்பாருங்கள். இன்னும் இரண்டு மணி நேரத்திற்குள் அவரவர்கள் கருத்து எழுத்துவடிவில் எனக்கு வேண்டும்!" என்று கூறிவிட்டு என்னைப் பார்த்து "வாய்யா – கொஞ்சம் வெளியே போய்வருவோம்! என்றார். இந்த சூழ்நிலையில் வெளியே போவதா என்று எண்ணிக் கொண்டே புறப்பட்டேன். நேராக சினிமா ஒன்றிற்கு போனோம்! சினிமாவில் இடை இடையே பிரச்னையை கிளப்பினேன். அண்ணா சிரித்துக் கொண்டே ஏதோ சமாதானம் கூறிக் கொண்டிருந்தார். பிறகு படம் முடிந்து வெளியே வரும்போது முடிவு கூறினார்.

"யாருமே தூத்துக்குடி போகத் தேவையில்லை...ஆனால் நம்மில் யாராவது ஒருவர் அங்கே போயிருந்து நிலைமைகளை கவனித்துதேவைப்பட்டால் நாம் செய்ய வேண்டியதை தந்தி மூலமோ, அல்லது 'டிரங் போன்' மூலமோ சொல்லவேண்டும்!" என்றார். அறைக்கு வந்தோம் ... குழப்பத்திலிருந்த நண்பர்கள் தெளிவுறதான் எடுக்கும் முடிவை விளக்கினார். அங்கே குழுமியிருந்த எங்கள் எல்லோருக்கும் முழுத் திருப்தி "சினிமாவில் என்னய்யா, நடந்தது?" என்றார் பெரியண்ணன் நெடுஞ்செழியன். நான் சிரித்துக் கொண்டே "படம் ரொம்ப 'டல்' தாங்க. இடை வேளையில் கூட அவர் முடிவு எடுத்ததாகத் தெரியவில்லை. வரும் போதுதான் அவர் முடிவெடுத்துவிட்டார் என்று தெரிந்தது" என்று கூறினேன்.

ஆனால் யார் தூத்துக்குடி போவது என்று தெரியவில்லை. அந்த முடிவைஎடுக்கும் பொறுப்பும் அண்ணாவிடமே இருந்தது. அவர் முடிவு என்னை 'அந்த வேலைக்கு அனுப்புவதாக இருக்கும் என்பது அன்றிரவு எனக்குத் தெரியாது!

★

## வீரம்!

★

சென்னை பிரபாத் டாக்கீஸில் பண்டித ஜவஹர்லால் நேரு கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. காங்கிரசுக்கு மிகுந்த செல்வாக்குள்ள காலம். திலகர் நிதி மோசடி குறித்து எங்கும் கெட்ட பெயர் உலவியது. இளைஞர் அண்ணாத்துரைக்கு அக்கிரமத்தின் மீது கோபம் பொங்கியது. ஊழலை விளக்க விரும்பினார். சிறு பணம் சேர்த்து ஆங்கிலத்தில் ஓர் அறிக்கை தயாரித்து தானே எடுத்துக்கொண்டு நேரே மேடைமீது ஏறினார். பண்டித ஜவஹர்லால் நேருவிடம் அறிக்கை ஒன்றைக் கொடுத்தார். பக்கத்திலேயுள்ளவர்களுக்கும் விநியோகித்தார். இந்த இளைஞன் துணிச்சல் கூட்ட ஏற்பாட்டுக்காரருக்கு 'தர்ம சங்கடமாய்' இருந்தது.

## அண்ணாவின் குறி எதன்மீதோ!



வண்டியில்: வழக்கறிஞர் தில்லை வில்லாளன், கலைப்பூங்கா சுந்தரேசன், அருகே நிற்பவர் திராவிட மாணவர் முன்னேற்றக்கழகப் பொதுச்செயலாளர், எஸ். டி. சோமசுந்தரம்,

# "அண்ணா"

# தனி மனிதரல்ல — ஓர் வரலாறு!

முல்லை சக்தி

நீண்ட மலைத் தொடர்கள்; அகண்ட ஆறுகள்; விரிந்து பரந்த நிலப்பரப்பு; கரி, பரி; பூத்துக் குலுங்கும் எழிற் சோலைகள்; தித்திக்கும் கனிவகைகள்; எத்திக்கும் மணம்பரப்பும் அகில்; கத்தும் கடலில் முத்து; பூமியெல்லாம் கனிவர்க்கங்கள். பூவையர் முகமெல்லாம் நிலவு, ஆடவரெல்லாம் சிங்கக்கூட்டம். பாடிவரும் தென்றல்; ஆடிவரும் மயில் இவையெல்லாம் ஒரு நாட்டின் வளத்தின் விளம்பரப் பலகைகள்; பொருளாதாரப் புள்ளிகள், செல்வத்தின் சிறப்புகள், இவைகள் மட்டும் போதாது நாட்டின் புகழ்பாட ஒவ்வொரு நாட்டிலும் பிறந்து தவழ்ந்து தொண்டாற்றிய தூயவர்கள், காவியம் புனையும் கவிஞர்கள் ஓவியப் புலவர்கள் — எழுத்துச் சிற்பிகள் — தத்துவ வாதிகள் — அரசியல் தலைவர்கள் ஆகியோரால்தான் ஒரு நாட்டின் புகழ் மணக்கிறது, நாட்டின் புகழையும் பெருமையையும் உலகிற்கு எடுத்துக் காட்டும் கண்ணாடியே இந்த விற்பன்னர்கள்தான், அவர்களால்தான் ஒரு நாட்டின் வளமே பூர்ணத்துவம் அடைகிறது.

வால்டேர் — ரூசோ — இந்த இரண்டு நாமதேயங்கள் இன்றும் பிரெஞ்சு நாட்டின் பெருமையை பறைசாற்றுகிறது. பெர்னாட்ஷா, ஷேக்ஸ்பியர், இங்கிலாந்திற்கு புகழாரம் சூட்டியவர்கள். அயர்லாந்தின் மதிப்பு, டிவேலராவால் உயர்ந்தது, மார்டின் லூதர், மாஜினி — இத்தாலியின் தேனநவிகள். உலகுக்கெல்லாம் புதியதோர் தத்துவத்தை அளித்த லெனினால் இரஷியாவின் புகழ் மணக்கிறது.

'ஐரோப்பாவின் நோய்' என இகழப்பட்ட துருக்கி கமால் பாஷாவினால் இன்று உலக அரங்கில் வெற்றிகொடி நாட்டியிருக்கிறது. சீர்திருத்தச்செம்மல் சன்-யாட்-சென்னால் சீனா பெருமை கொள்ளுகிறது, அமெரிக்காவுக்கு புகழ்மணி சூட்டியவர் அபிரகாம் லிங்கன். சாந்தசொரூபியாம் காந்தியாரின் ஒளி விளக்கால் உலக அரங்கில் மங்கிப் போயிருந்த இந்திய உபகண்டம் பசும் பொன்னாகியது. இத்தகையவரின் பரம்பரையை சார்ந்தவர்தான் அறிஞர் அண்ணா. இவரால் தென்னகம் தமிழகம். புகழடைகிறது. பெருமை அடைகிறது. தலை நிமிர்ந்துநிற்கிறது! அண்ணாவை பெற்றதால் தமிழக அன்னையின் முகத்தில் பெருமையும் கர்வமும் ஜொலிக்கிறது; பெற்ற வயிறு பூரிப்படைகிறது. தமிழகத்திற்கு எத்தனையோ சிறப்புகள் உண்டு. அந்த சிறப்புக்கெல்லாம் மணிமுடிச் சூட்டியவர் அறிஞர் அண்ணா, தமிழகத்திற்கு மட்டுமல்ல இந்த தலைமுறைக்கே அவர் ஒப்பற்ற மகுடம்.

அண்ணா — அறிஞர் என்ற நான்கு எழுத்துக்களில் மட்டும் அடங்கிவிடுபவரல்ல. அவருடைய அறிவுக்கு எல்லைக் கோலுவது முட்டாள்த்தனம். அவருடைய திறமைக்கு வரையறுப்பது அறிவீனம். ஆழ் கடலின் ஆழத்தை கணக்கிடலாம். வான மண்டலத்தின் எல்லையை வகுக்கலாம். ஆனால் அவரின் அறிவை, திறனை மதிப்பிடுவது என்பது இந்த தலைமுறையினரால் ஆகாததொன்று; ஒருவேளை 'வருங்காலம்' அவைகளை மதிப்பிடக்கூடும்.

அண்ணா—உயர் எண்ணங்கள் மலரும் சோலை, வகை, வகையான பூக்கள், சுவை சுவையான கனிகள் நிரம்பிய நந்தவனம், எடுக்க, எடுக்க, அழியாத அட்சயபாத்திரம்; அள்ளக்குறையாத சுரங்கம். வாரி, வாரி, இறைத்தாலும் குறையாத குளம்; தெவிட்டாத தேனருவி; இன்பம் சேர்க்கும் தென்றல்:

அண்ணா — ஒரு தனிப்பட்ட மனிதரல்ல; அவர் ஒரு வரலாறு. தமிழகத்தின் சரித்திரத்தின் ஒவ்வொரு துறையிலும், ஒவ்வொரு வரலாற்றை சேர்ந்திருக்கும் சிருஷ்டிக் கர்த்தா அவருக்குப் பின்னாலே எண்ணற்றவர்கள் அணிவகுத்து நிற்பதைப் போலவே, எண்ணற்ற வரலாறுகள் பின்னிக் கிடக்கின்றன.

இளங்கோவும், வள்ளுவனும், நெஞ்சை அள்ளும்சிலப்பதிகாரத்தையும், உலகமறையாம் திருக்குறளையும் தந்துவிட்டு மறைந்துவிட்டனர். அவர்கள் சரித்திரம் முடிந்து விட்டது. தாகூரின் கதை கீதாஞ்சலியோடு முடிந்துவிட்டது. நாடகத்தோடு முடிந்து விட்டது ஷாவின் நாடகம். அடிமை விலங்கொடித்ததோடு தீர்ந்து விட்டது அபிரகாம்லிங்கனின் வாழ்வு. பொதுவுடமை தத்துவத்தோடு தீர்ந்துவிட்டது லெனினின் சரித்திரம், ஆனால் அண்ணாவின் வாழ்வு—வீரகாவியத்தோடு முடிந்து விடவில்லை; வரலாற்றை உற்பத்தி செய்துவிட்டது. அந்த வரலாறு உலகம் அழியும்வரை தொடரும்.

உலக பேரறிஞர்கள்—எழுத்து வேந்தர்கள்—தத்துவ ஞானிகள்—அரசியல் தலைவர்கள்—விஞ்ஞான விற்பன்னர்கள் — இவர்களின் சரித்திரத்தை புரட்டிப் பார்த்தால், அவரவர்கள் ஒவ்வொரு துறையில்தான் திறமைசாலிகளாக இருந்தார்கள் என்பதை காண முடியும். ஆனால் அண்ணா எத்தனை எத்தனையோ துறையில் தனது திறமைகளை காட்டிருக்கிறார். இதுவரையில் இந்த பூமி மாதா பெற்றெடுத்த செல்வங்களுக்கெல்லாம் இல்லாத திறமை—அண்ணாவுக்கு உண்டு. ஒன்று, இரண்டு, என்று கணக்கிட்டு கூற இயலாத வகையில், பல துறைகளில், நிலவாக காட்சி அளிக்கிறார்.


சிறு கதையா? தொடரோவியமா? திரைக் கதையா? நாடகமா? அரசியல் கட்டுரையா? நகைச்சுவை தேவையா? தத்துவ விளக்கங்களா? எது வேண்டும்? அவரின் பேனா, தங்கு தடையின்றி ஓடும்.

அரசியல் விளக்கமா? ஆணவக்காரர்களுக்கு ஆணித்தரமான பதிலா? எது தேவை? அவரின் நா, சுவையோடு, உதிர்க்கும்!

பட்டி தொட்டியா? நாடு நகரமா? அவரின் கால்கள் நடைபோட்டுக் கொண்டிருக்கும். பொதுப் பணிப்புரிய! அடிமைத் தளை ஒடிய, திட்டம் தீட்டும் அவரின் கரங்கள். சிறைச்சாலைக்கு புக அஞ்சாதது அவரின் நெஞ்சம். பாசம் சுரக்கும் அவரின் இதயம். எதிர்த்து வருபவர்களின் திமிரை அடக்கும், அவரின் கூரிய விழிகள். இத்தனையும் பெற்றவர் அண்ணா! இவருக்கு ஈடு—எவராவது உண்டா? தமிழகத்தில் மட்டுமல்ல, தென்னகத்திலே மட்டுமல்ல, இந்திய உப கண்டத்திலே மட்டுமல்ல, உலக அரங்கிலாவது உண்டா! இல்லை, இல்லை. என்று சரித்திரம் கூறுகிறது!

அண்ணா—இன்று நம் குடும்பத் தலைவர். அவரின் நா அசைவுக்கு இலட்சோப இலட்ச மக்கள் காத்துக்கிடக்கும் புதுமை வேறு எங்கு காணமுடியும்? இத்தகைய, ஒப்பாரும், மிக்காரும் இல்லாத 'வரலாறு' அண்ணா. அவரின் பெருமையை பாட நாமெல்லாம் தகுதியற்றவர்கள் என்பது என் எண்ணம். அவரின் காலத்திலே, நாமெல்லாம் வாழ்கிறோம், அவரின் பாசறையிலே பணி புரிகிறோம், என்ற பெருமை பெற்றவர்கள் நாம். நம்முடைய சந்ததியார் அதற்காக நம் மீது பொறாமை கொள்வார்கள். இதை விட வேறு சிறப்பும், பெருமையும், நம் சரித்திரத்திற்கு ஏது? அந்த பெருமையோடு, உரிமையோடு, அண்ணாவை—நமது அண்ணனை, வணங்குவோம். அவரின் வழி நடப்போம்!

## படகோட்டும் அண்ணா!



படத்தில்: வழக்கறிஞர். தில்லை வில்லாளன், தோழர்கள் டி. கே. பொன்னுவேலு, எஸ். டி. சோமசுந்தரம்.

# அழைக்கின்றார் அண்ணா!

(அ. பொன்னம்பலனார்)

★

பொது வாழ்க்கையில் முப்பத்தைந்து ஆண்டுகள் தொடர்பு கொண்டுள்ள நான் நம் அண்ணாவைப் பொது வாழ்க்கையில் கட்டாய இந்தி எதிர்ப்புக் காலத்தில் தமிழகம் முழுதும் சுற்றுப் பயணம் செய்ய அழைத்தேன். தமிழ் நாட்டு மக்களுக்கு நல்லதொரு விழிப்புணர்ச்சி ஊட்டினார்கள். விடுதலைப் பத்திரிகையில் ஆசிரியர் பொறுப்பேற்றுப் பணியாற்றிட வேண்டி விரும்பி அழைத்த காலத்தில் அன்புடன் வந்து, நற்பணியாற்றி ஆக்கமும் ஊக்கமும் தந்தார்கள் அண்ணா! அதுமுதல் இதுவரை நம் அண்ணா பொது வாழ்க்கையில் நல்லதொரு சிறந்த இடத்தைப் பெற்றது எனக்கு அளவில்லா மகிழ்ச்சி.


அறிஞர் அண்ணா போன்ற எண்ணமுள்ள நல்ல உள்ளம் படைத்தவர்களையும், எதிர்கால ஆக்க இளைஞர்களையும் தமிழகத்தில் நாம் உழைப்பின் பயனாகப் பெற்றோம். நம் உழைப்பு வீண்போகவில்லை. நம் முயற்சியும் உழைப்பும் இறுதியில் வெற்றி பெற்றே தீரும் என்ற நம்பிக்கையோடு நம் அண்ணாவின் அன்பழைப்பை மகிழ்வுடன் ஏற்று பணியாற்றுகின்றோம். நம் பணி "தமிழகம்" "தென்னகம்" மட்டுமின்றி கடல்கடந்து வாழ்ந்திடும் நம் மக்கள் உள்ளத்திலும் இடம்பெற்று நம் அண்ணார் புகழ்ஏற பாராட்டி வாழ்த்தப்படுகின்றார். நம் அண்ணா அழைக்கின்றார்! திரண்டு வாரீர். "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற நிலை பெற உழைக்க வாரீர். அறிஞர் அண்ணாவின் அழைப்பை மகிழ்வுடன் ஏற்று பணிபுரிய வாரீர். வாழ்க அண்ணா என்று மீண்டும் வாழ்த்துகிறோம்.

நம் அண்ணாவிற்கு வயது ஐம்பது ஆண்டு முடிவடைந்து ஐம்பத்தி ஒன்றும் ஆண்டில் புகுந்திடும் இந்த சமயம் நம் அண்ணாவின் உழைப்பையும் திறமையையும் பாராட்டி வாழ்த்தி மகிழ்ந்திடுவோம். நம் அண்ணாவைத் தூற்றியும் பொது வாழ்க்கையில் தலையிடாமல் செய்திடத் திட்டம் தீட்டியும், இழிவாகப் பேசியும், எழுதியும் உண்மையை மறைத்துப் பொய் கூறியும் பொதுமக்களிடம் தவறாகப் பிரச்சாரம் செய்தும் இறுதியில் தோல்வி கண்டவர்கள் பலர் அவர்களில் தங்கள் தவறை உணர்ந்து திருந்தியவர்களுமிருக்கிறார்கள்.

மக்கள் இருள்நீக்கவந்த உதய சூரியனாகக் காட்சிதரும் அறிஞர் அண்ணா வாழ்க. திராவிட மக்கள்வாழ்க்கையில் முன்னேற்றங் காண ஓயாது உழைக்கும் முத்தமிழ் வளர்த்திடும் காஞ்சி தந்த கருவூலம் எங்கள் அண்ணா. இன்பத் திராவிடம் கண்டிடத் துடிக்கும் எங்கள் உள்ளம் நிறைந்த அண்ணா வாழ்க, வளம் பல பெற்று வாழ்க என்று மன மகிழ்வுடன் அன்புடன் வாழ்த்துகின்றோம்.

★

## எங்கள் நன்றி



படத்தில் மணமகள் அருகில் அமர்ந்திருப்பவர் ராணி அண்ணியார்.

9—9—59 புதன்கிழமையன்று ஆனைமலை தேவி டாக்கீஸில் அறிஞர் அண்ணா அவர்களின்சீரிய தலைமையில் நடைபெற்ற எங்கள் திருமணவிழாவிற்கு வந்துசிறப்பித்த பெருமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கட்கும், வாழ்த்துரை வழங்கிய தலைவர்களுக்கும், தந்தி கடிதங்கள் மூலம் வாழ்த்துச்செய்தி அனுப்பிய நூற்றுக்கணக்கான நல்லவர் கட்கும், பரிசு வழங்கிய நண்பர்கட்கும், திருமணவிழா வெற்றிபெற ஒத்துழைத்த எல்லோருக்கும் எங்களது அன்புகலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தனித்தனியே கடிதங்கள் எழுத இயலாதநிலை, வாய்ப்பு நேரும்போது கடிதமூலமும் நேரிலும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அன்புள்ள,

கே. ஏ. மதியழகன்,
இராஜசுந்தரி.

# "பழைய பல்லக்கு"

கு. இராசாராம் பி.ஏ

வடநாட்டின் எழில்மிக்க நகரான பம்பாய்ப் பட்டிணத்திலிருந்து மாலை ஐந்து மணிக்குக் கிளம்பி, அண்ணா அவர்களையும் எங்களையும் ஏந்திக்கொண்டு ஸ்டாண்டர்ட்கார் சிற்பத்திலும், சித்திரத்திலும். எழிலைக்கூட்டி இன்றும் இன்பத்தை அளித்து வரும் எல்லோரா, அஜந்தா நோக்கிப் பறந்து கொண்டிருந்தது. முன் பக்கத்தில் அண்ணா அவர்களும், பின் பக்கத்தில் என்னுடன் நண்பர், சி. வி. இராசகோபால், அன்பில் தருமலிங்கம்முதலியோரும் அமர்ந்திருந்தனர். காரின் சாரதியாக பாண்டுரங்கம் அமர்ந்திருந்தார். நாங்கள் கொஞ்சதூரம் அமைதியாகச் சென்றோம். அன்பிலுக்கு ஏதாவது அரசியல் பற்றிப்பேசுவோம் என்ற எண்ணம் தோன்றிற்று. சரி என்று நானும், 1944-ம் ஆண்டு எங்களூரில் நடைபெற்ற கடைசி ஜஸ்டிஸ் கட்சியின், முதலாவது திராவிடர் கழகத்தின் மாநாட்டு நடவடிக்கைகள் பற்றிக் கூறினேன். அப்பொழுது அந்த மாநாட்டை நடத்திய வரவேற்புக் கமிட்டியாளர், பெரியாரைத் தலைமைப் பீடத்தில் அமர்த்துவதற்குப் பதிலாக அன்றைய குமாரராஜா முத்தையா செட்டியார் அவர்களைத் தலைவராக ஏற்பாடு செய்ய பெரும் முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ராவ்சாகிப் ரத்தின சாமிப்பிள்ளை அவர்களும், சண்டே அப்சர்வர் பாலசுப்பிரமணியம், முதலியவர்கள் இதில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். திரு. எஸ். வி. லிங்கம் அவர்கள் இதைத்தகர்ப்பதற்காக வேலை செய்து கொண்டு இருந்தார்கள். கட்சியை பாமரர் பக்கம் கொண்டு வருவதா; அல்லது பணக்காரர்பக்கமே அனுப்பி விடுவதா? என்ற கேள்வி எழுந்த நேரம் அது. அதைப் பற்றி முழு விபரமும் நாங்கள் இருவரும் மாறி, மாறிப் பேசிக் கொண்டு வந்தோம். அதுவரை எங்கள் விவாதத்தையே செவிமடுத்துக் கொண்டுவந்த அண்ணா அவர்கள், அப்போது நடைபெற்ற உண்மைச் சம்பவத்தைக் குறிப்பிட்டார்கள். இந்தச் செய்திகள் நாடெங்கிலும் பரவிக் கொண்டிருந்தபோது அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்தில் இருந்தார்கள். உடனடியாகப் புறப்பட்டு வரும்படி தந்தியொன்று பெரியாரிடம் இருந்து அண்ணா அவர்களிடம் வந்து சேர்ந்தது.

அண்ணா அவர்களும் உடனே புறப்பட்டு ஈரோடு போய்ச் சேர்ந்தார்கள். அண்ணா அவர்களைக் கண்டதும் பெரியார் அவர்கள் பெரிதும் வரவேற்று சேலத்தில் நடைபெற்று வரும் செய்திகளை மிகவும்விளக்கமாகக் கூறினார்களாம். எல்லாவற்றையும் கூறி முடித்தவுடன், கடைசியாகப் பெரியார் அவர்கள், "சேலத்தில் பல்லக்குத் தயாராகிவிட்டது. மூன்று பேர் ஏற்கனவே பல்லக்கைத் தூக்கத் தயாராய் விட்டார்கள். அவர் உன்னை நான்காவது ஆளாகச் சேர்த்துக் கொள்ள விரும்புகின்றார்கள். உன் விருப்பம் என்ன? என்று கேட்டார்களாம். உடனே அண்ணா அவர்கள், பல்லக்குத் தூக்குவதுதான் என்வேலை என்பது முடிவானால், நான் பழைய பல்லக்கையே தூக்குகின்றேன்" என்றாராம். இதைக்கேட்ட நாங்கள் அனைவரும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினோம்.

★

## ஈ. வெ. கி. சம்பத், எம். பி.

★

## மலாயா, சிங்கப்பூர் போகத் தடை!

தோழர் ஈ. வெ. கி. சம்பத், எம். பி. அவர்களும், தோழர் அ. பொன்னம்பலனார் அவர்களும், மலாயா, சிங்கப்பூர் நாடுகளில்நுழைய அந்தநாட்டு அரசுகள் தடைவிதித்து விட்டன. 19-9-59-ந் தேதியன்று மாலை, சம்பத் அவர்கள், அவரது துணைவியார் சுலோசனா சம்பத், தோழர் அ. பொன்னம்பலனார் ஆகியோருடன் சென்னையிலிருந்து விமான மூலம் மலாயா புறப்படவிருந்தார். ஆனால் வியாழன் இரவு தந்தி மூலம், சம்பத் அவர்களும் பொன்னம்பலனார் அவர்களும் மலேயா சிங்கப்பூர் நாடுகளுக்கு அந்தநாட்டு சர்க்காரால் நுழையத்தடை விதிக்கப்பட்டிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்கவர்கோலம் கொண்டதாய், எதிர்ப்போர் மருளும் அற்றல் மிக்கதாய் ஆக்கித் தந்துள்ளார்.


உள்ள வயதைக் குறைத்துச் சொல்வதிலேயும் பிறர் நம் வயதைக் குறைத்து மதிப்பிட்டுப் பேசுவதைக் கேட்கும் போதும் பெருமகிழ்ச்சி கொள்வதுதான் உலக வழமை. ஆனால் அண்ணா அவர்களுக்கும், நமது தோழர்கள் பலருக்கும் உண்மை வயதைவிட நான்கைந்து ஆண்டுகள் எவரேனும் கூட்டிச் சொன்னால் அதை மறுத்துச் சொல்ல மனம் வருவதில்லை. காரணம் தமிழ் நாட்டு அரசியலில் நாம் ஒரு தனி முயற்சிசெய்து அதற்கு மக்கள் ஆதரவு பெருகிவரும் நிலையில் நமது இளம் வயதை சில வேளைகளில் நாமேகூட எண்ணிப் பார்க்கும் போது திகைப்பு மேலிடுகிறது. மாற்றுக் கட்சியினர் எப்பொழுதாவது அதனைச் சுட்டிக் காட்டினால் நமக்குச் சுரீரெனத் தைக்கிறது. இன்று அண்ணா அவர்களுக்கு ஐம்பது வயது நிரம்பிற்றுஎன்பதைக்கேட்கும் போது நமக்கு ஏற்படும் மகிழ்ச்சிக்கான காரணங்களில் அது மிகமுக்கியமானது. 'அறியாப் பருவத்தினர்' 'பிஞ்சிலே பழுப்பவர்கள்' 'சிறுபிள்ளை விளையாட்டு' 'வயதானால் தெளிவடைவார்கள்' என்பனபோன்ற ஈட்டிகள் இனி நம்மீது வீசப்படுவது குறையும் என்பதாகும்,

ஆனால் அண்ணா அவர்களுக்கு எப்பொழுதுமே தான் சாதித்திருக்க வேண்டியது அதிகமாகவும்; சாதித்தவை குறைவாகவுமே கருதி அதிருப்தி அடையும் சுபாவம் உண்டு. இந்த 'அதிருப்தி' தான் அவரைப் பெருஞ்சாதனைகளைப்புரிய வைத்திருக்கிறது. என்பது என் எண்ணம். பல ஆண்டுகளுக்குமுன் அவர் குறிப்பிட்டதொன்று என் நினைவுக்கு வருகிறது. 'என்ன சம்பத்து நாம் பெரியகாரியங்களைச் செய்து விட்டோம்? முப்பத்திரெண்டு வயதில் அவுங்சான் பர்மிய மக்களின் ஒப்பற்றத் தலைவனாகி, பர்மாவின் முதலமைச்சனாகஇருந்து பொது வாழ்வில் ஈடுபட்டவ்வனுக்குக் கிடைத்தற்கரிய 'எதிரிகையில் சாவு' எனும் பெருமையையும் பெற்றுக் கொண்டு போய்விட்டான். நாமும் இருக்கிறோமே!' என்று பெருமூச்சோடு சொல்வார்.

அவரது அறிவாற்றலும். எதிர்கட்சியினரை ஆபாசமாகத் திட்டாமலே திறமையாக எதிர்த்து வெற்றி காண முடியும் என மெய்ப்பித்துக் காட்டிய அரசியல் போர்முறைப் புதுமையும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தனிப்படுத்திக் காட்டியது. கொள்கைகளை முந்திக்கொண்டு கழகத்தின் நாகரீகப் பாணி பலரையும் ஆட்கொண்டது. அவரது போர்க்குரல் கேட்டு தமிழகம் பல போராட்டங்களில் ஈடுபட்டு தன் மதிப்பை உயர்த்திக் கொண்டிருக்கிறது. அவரது முழு கவனத்தையும், முழு சக்தியையும் பயன்படுத்திக்கொள்ள திராவிட முன்னேற்றக் கழகம் துடிதுடித்து நிற்கிறது. கலையுலகம் அவரது நேரத்தையும், நினைப்பையும் கொள்ளை கொள்ள முயலும் போதெல்லாம். ஒரு சக்களத்திப் போராட்டமே நடைபெறுகிறது! 'உலகைத்திருத்திய உத்தமர்கள்' வரிசையில் எங்கள் அண்ணா இடம்பெற வேண்டுமென்ற ஆவலும், வீரத்தோடு ஒரு மனதாய்ப் போராடி மக்களுக்கு விடுதலைத் தேடித் தந்த உலக விடுதலை வீரர்கள் வரிசையில் அவரை அமர்த்தி அழகு பார்க்கும் பெரு வாய்ப்பு நம் நாட்டவருக்குக் கிடைக்க வேண்டுமென்ற பெருவிருப்பம் மாறி மாறி ஏற்பட்டு அவரை நமக்குரியவராகவும் நம்மைஅவருக்குரியவர்களாகவும் ஆக்கிக் கொண்டிருக்கின்றன.

அண்ணனாய், தளபதியாய் தலைவனாய் வாழ்க்கை நெறி காட்டும் வழி காட்டியாய்த் திகழ்ந்து தேம்பிக் கிடக்கும் திராவிட சமுதாயத்திற்குப் புத்துயிர் ஊட்டும் திருப்பணியில் தன்னை முழுக்க முழுக்க ஈடுபடுத்தி நீண்டநாள் வாழ்ந்து, நெடுநாளையப் பழி துடைத்துப் புகழ்தேடி நம்மை வாழ்விக்க வேண்டுமென்ற எனது உள்ளத்தின் அடித்தளத்தில் உள்ள எனது பேராவலை அண்ணா அவர்களது ஐம்பது தாண்டு நிறைவு விழாவின் போது கூறிக்கொள்கிறேன்.

## வாழ்க இந்திரா - குருமாணிக்கம்






உலக உரிமையாளர் அஜந்தா அருணாசலம் & எம். திருப்பதி (தில்லைநகர், திருச்சிராப்பள்ளி.)

அச்சிடுபவர் : கே. இராசாராம், பி.ஏ., கஸ்தூரி லித்தோ ஒர்க்ஸ், 34, சின்னதம்பி தெரு. சென்னை-1.
ஆசிரியரும், வெளியிடுபவரும் : கே. ஏ. மதியழகன், பி.ஏ., 126, மவுண்ட் ரோடு சென்னை-6.